"THE HINDU"

PAGE NO: 03

DATE: 14.06.2021

# Pondicherry University ranks among world's top 1,000

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

Pondicherry University has been ranked among the top 1,000 universities in the world in the latest QS World University Rankings.

According to a press note, Pondicherry Central University was ranked between 801 to 1,000 category in the recently released QS World University Rankings 2022.

Pondicherry University also appears in the top 20 among Indian Universities/ Institutions in the rank list from India. The University scored very well with regard to performance indicators.

"DINAKARAN"

PAGE NO: 06

DATE: 14.06.2021

# உலக பல்கலைக்கழக தரவரிசையில் புதுவை பல்கலைக்கு முக்கிய இடம்

**புதுச்சேரி, ஜூன் 14:** புதுவை பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கியூ.எஸ் உலக பல்கலைக்கழக தரவரிசையானது, பல்கலைக்கழகத்தின் பல முக்கிய பணிகள், கல்வியாண்டு தேர்ச்சி விகிதம், நற்பெயர், பல்கலைக்கழக தலைமையின் அணுகுமுறை, அர்ப்பணிப்பு, ஆசிரிய மாணவர் விகிதம், ஆராய்ச்சி கட்டுரைகள், சர்வதேச ஆசிரியர்கள் விகிதம் மற்றும் சர்வதேச மாணவர்கள் விகிதம் போன்ற 6 கடுமையான செயல்திறன் குறிகாட்டிகளுடன் தரவரிசை பட்டியல் 2022 சமீபத்தில் வெளியிட்டது. இதில் புதுவை பல்கலைக்கழகம் 801 முதல் 1000 வகைகளுக்கு இடையில் தரவரிசை பெற்ற உலகின் முதல் 1000 பல்கலைக்கழகங்களில் புதுவை பல்கலைக்கழகம் இடம்பெற்றுள்ளது. இந்தியாவிலிருந்து தரவரிசை பட்டியலில் உள்ள இந்திய பல்கலைக்கழகங்கள், நிறுவனங்களில் முதல் 20 இடங்களில் புதுவை பல்கலைக்கழகம் இடம்பெற்றுள்ளது. கியூ.எஸ் உலக பல்கலைக்கழக இடையிலான தரவரிசையில் புதுவை பல்கலைக்கழகம் இடம் பெற்று வரலாற்று சாதனை பெற்றுள்ளது. மேலும் புதுவை பல்கலைக்கழகம் பங்கேற்கும் இந்திய மற்றும் ஆசிய பல்கலைக்கழக தரவரிசையில் தொடர்ந்து இடம்பெற்று முன்னேறி வருகிறது. உலக பல்கலைக்கழக தரவரிசையில் 2022ல் 22 பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள் மட்டுமே இந்திய அளவில் இடம் பெற முடிந்தது. இதில் புதுவை பல்கலைக்கழகம் ஆராய்ச்சி, கற்பித்தல், அர்ப்பணிப்பு, ஆசிரியர்களின் ஆராய்ச்சி கட்டுரை போன்ற செயல்திறன் குறிகாட்டிகளில் மிகச்சிறந்த மதிப்பெண் பெற்று சாதனை படைத்துள்ளது. உலக பல்கலைக்கழக தரவரிசையானது 2014 முதல் அதன் தரவரிசையை அறிமுகப்படுத்தி வெளியிட்டு வருகிறது. இதில் புதுவை பல்கலைக்கழகம் 2018 முதல் பங்கேற்று வருகிறது. முன்னதாக, புதுவை பல்கலைக்கழகம் QS ஆசியா தரவரிசையில் 301- 350 வகை பிரிவிலும், பிரிக்ஸ் பல்கலை தரவரிசையில் 211- 220 வகை பிரிவிலும் கடந்த 4 ஆண்டுகளாக தொடர்ந்து தரவரிசையில் இடம்பிடித்து வருகிறது. இத்தகைய சாதனையை படைக்க உறுதுணையாக இருந்த ஆசிரியர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் நன்றியும், பாராட்டும் தெரிவித்தார்.